**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**சுருக்குமுறை பட்டியல் வழக்கு எண்.176 /2019**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | எதிரி 30/01/2018 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 04/09/2018 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 09/11/022 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 - 01/02/2023 / இல்லை<br>அ.சா.2- 01/02/2023 / இல்லை<br>அ.சா.3 01/02/2023 / இல்லை<br>அ.சா.4 19/06/2024 / இல்லை<br>அ.சா.5 14/10/2024 / 14/10/2024 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 19/10/2024 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை | | இல்லை |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:24:07 +0530

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டநாள்: | | |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:24:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ஆம் நாள் புதன் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி 25-ம் நாள்

**சுருக்குமுறை பட்டியல் வழக்கு எண். 176/2019**

**(CNR.No. TNTJ 270013232019)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | எஸ்.டி.சி.எண்.176/2019 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருநீலக்குடி காவல் நிலையம்<br>குற்றஎண்.25/2018 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>திருநீலக்குடி காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | சுந்தரமூர்த்தி, வயது 40/2018,<br>த/பெ. கலியபெருமாள்,<br>வடக்கு தெரு, பெரப்படி, கண்ரமாணிக்கம்,<br>குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 30/01/2018 |
| 6 | முறையீடு | 31/01/2018 |
| 7 | கைது | 30/01/2018 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 30/01/2018 |
| 9 | விசாரணை துவக்கம் | 01/02/2023 |
| 10 | விசாரணை முடிவு | 08/04/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் எதிரி பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.04.08 12:24:21 +0530

| | | |
|---|---|---|
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கு கும்பகோணம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தால் 19/09/2018 ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.446/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நில அதிகார வரம்பிற்கு கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 23/10/2019-ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.176/2019 ஆக மறு எண் கொடுக்கப்பட்டு, 08/04/2026-ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகி, எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு**.S.**அய்யப்பன்**, B.A.,B.L., அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

கடந்த 30/01/2018 ம் தேதி காலை சுமார் 10.10 மணிக்கு திருநீலக்குடி, அம்மன்குடி, அந்தோணியார் கோவில் தெருவில் பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப அவரது வீட்டிற்கு கிழக்கிலிருந்து மேற்கே வந்து கொண்டிருந்தபோது, அதே திசையில் இருந்து மேற்கு நோக்கி TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட HERO HONDA PASSION PRO என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.08 12:24:27 +0530

இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் மீது மோதி சொற்பகாயம் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் திருநீலக்குடி காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரி மீது பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:24:32 +0530

**6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் பேசமுடியாத நிலையில் சிகிச்சையில் இருந்ததால், அவரது மகன் அ.சா.1 ரீகன் என்பவரிடம் பட்டியல் சாட்சி-8 காவல் உதவி ஆய்வாளர் ஆனந்தி என்பவர் புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலத்தை பெற்ற காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.25/2018-ல் சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 31/01/2018 ம் தேதி மாலை 03.00 மணயளவில் சம்பவ இடம் சென்று அ.சா.3 அழகர்ஜான் மற்றும் அ.சா.4 பாக்கியராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 அன்புராஜ் விசாரிக்கப்பட்டுள்ளார். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், 30/01/2018 ம் தேதி மாலை 06.00 மணியளவில் திருநீலக்குடி காவல் நிலையத்தில் தாமாக ஆஜரான எதிரி சுந்தரமூர்த்தி என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்குப் பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்து ஏற்படுத்திய TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட HERO HONDA PASSION PRO என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.08 12:24:39 +0530

வைத்துள்ளார். பட்டியல் சாட்சி-7 மருத்துவர் விஷ்ணு பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்து அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியுள்ளார். பின்னர் 25/07/2018 ம் தேதி கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று இவ்வழக்கு விபத்து ஏற்படுத்திய TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட HERO HONDA PASSION PRO என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி-6 வெங்குடுசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வந்துள்ளார். பின்னர் இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

7. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

RANGESWARI Digitally signed by RANGESWARI
Date: 2026.04.08 12:24:45 +0530

10. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

12. அரசு தரப்பில் கடந்த 30/01/2018 ம் தேதி காலை சுமார் 10.10 மணிக்கு திருநீலக்குடி, அம்மன்குடி, அந்தோணியார் கோவில் தெருவில் பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப அவரது வீட்டிற்கு கிழக்கிலிருந்து மேற்கே வந்து கொண்டிருந்தபோது, அதே திசையில் இருந்து மேற்கு நோக்கி TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட HERO HONDA PASSION PRO என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் மீது மோதி சொற்பகாயம் ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

13. அ.சா.1 ரீகன் தனது சாட்சியத்தில், பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் தனது அப்பா என்றும், கடந்த 31/01/2018 ம் தேதி அம்மன்குடியில் உள்ள தனது வயலுக்கு சென்றுவிட்டு, தனது அப்பா அம்மன்குடியில் உள்ள அந்தோனியார் கோவில் அருகில் புதுக்குடியில் இருந்து அம்மன்குடி செல்லும் சாலையில், சாலையின் வலது புறமாக நடந்து சென்றுக்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:24:56 +0530

கொண்டிருந்தபோது, பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த சுந்தரமூர்த்தி என்பவர் தனது அப்பா மீது மோதிவிட்டார் என்றும், அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 68 C 1600 என்றும், சத்தம்கேட்டு தான் சம்பவ இடத்திற்கு ஓடி சென்று பார்த்ததாகவும், தனது வீடு சுமார் 50 மீ. தூரத்தில் தான் உள்ளது என்றும், சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தனது அப்பாவின் வலது கால் உடைந்து இருந்தது என்றும், தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், அப்போது சம்பவ இடத்தில் சுந்தரமூர்த்தியும் இருந்தார் என்றும், பக்கத்தில் இருந்த அன்பு என்பவர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து கும்பகோணம் அரசு மருத்துமனைக்கு தனது அப்பாவை சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்ததாகவும், பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு தனது அப்பா 45 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றும், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. வக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 அன்புராஜ் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், சாட்சி மரியதாஸ் மற்றும் அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும் கடந்த 31/01/2018 ம் தேதி தான் அம்மன்குடியில் உள்ள மாதா கோவில் அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், மரியதாஸ் அவரது வயலுக்கு சென்றுவிட்டு மாதாகோவிலுக்கு எதிரே நடந்து வந்து கொண்டிருந்தார் என்றும், அப்போது, பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த திருமலைராஜபுரத்தில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த சுந்தரமூர்த்தி

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:03 +0530

என்பவர் மரியதாஸ் மீது மோதிவிட்டார் என்றும், தான் ஓடி சென்று பார்த்ததாகவும், மக்கள் கூட்டமாக வந்து விட்டார்கள் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட மரியதாசை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. பார்வை மகசர் சாட்சியாக அ.சா.3 அழகர்ஜான் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 2011 ம் வருடம் ஒருநாள் அம்மன்குடியில் உள்ள அந்தோனியார் கோவில் அருகில் இருந்தபோது, திருநீலக்குடி போலிசார் அங்கு வந்து, அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக விசாரணை செய்து அதற்காக தன்னிடம் கையொப்பபம் வாங்கி கொண்டார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். பாாவை மகசரில் உள்ள அ.சா.3 ன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161 ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

16. மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 பாக்கியராஜ் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 2018 ம் ஆண்டு ஒருநாள் மாலை நேரத்தில் தான் தனது வீட்டிற்கு செல்வதற்காக நடந்து வந்தபோது அம்மன்குடி மாதாகோவில் தெரு அருகே கூட்டமாக இருந்தது என்றும் தான் சென்று பார்த்தபோது அங்கு விபத்து ஏற்பட்டிருந்தது என்றும், அடிப்பட்டவர்களை ஆம்புலன்ஸில் ஏற்றிச் சென்றார்கள் என்றும், பார்வை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:13 +0530

மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

17. அ.சா.5 ரகுநாத், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் ஆனந்தி என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், உதவி ஆய்வாளர் கடந்த 31.01.2018ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு விபத்தில் காயமுற்ற மரியதாஸ் என்பவர் பேசமுடியாத நிலையில் சிகிச்சையில் இருந்ததால் அவரது மகன் ரீகன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் ஆஜராகி காவல் நிலைய குற்ற எண்.25/2018 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.01.2018ம் தேதி மாலை 03.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகர்ஜான் மற்றும் பாக்யராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:19 +0530

செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் ரீகன், மரியதாஸ், அன்புராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 30.01.2018 ம் தேதி மாலை 6.00 மணியளவில் திருநீலக்குடி காவல் நிலையத்தில் தாமாக ஆஜரான எதிரி சுந்தரமூர்த்தி என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்து ஏற்படுத்திய TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passion Pro இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை சென்று விபத்தில் காயமுற்ற மரியதாஸ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஷ்ணு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்று வந்ததாகவும், பின்னர் 25.07.2018 ம் தேதி கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று இவ்வழக்கு விபத்து ஏற்பபடுத்திய TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passion Pro இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் வெங்குடுசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வந்ததாகவும், பின்னர் இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. வழக்கு சம்பவத்தில் காயமுற்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவரது மகன் வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 ரீகன்

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.08 12:25:25 +0530

புகார் வாக்குமூலம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், கடந்த 30.01.2018 ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு அ.சா.1 ன் அப்பா மரியதாஸ் வயல் வேலைக்கு போய்விட்டு ரோட்டின் இடது புற ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து செல்லும்போது அதே திசையில் பின்னால் வந்த இருசக்கர வாகனம் TN 68 C 1600 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, நடந்து முன்னால் சென்றுக் கொண்டிருந்த அ.சா.1 ன் அப்பா மரியதாஸ் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டதாகவும். மேற்படி விபத்தில் அ.சா.1 ன் அப்பாவிற்கு தலையின் பின் பக்கம், இடது காலில் முறிவும், வலது காலில் பலத்த ரத்த காயமும் ஏற்பட்டு அக்கம், பக்கம் உள்ளவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் அம்மன்குடி அந்தோனியர் கோவில் தெரு அருகில் இருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தும், மேல் சிகிச்சைக்கு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தும், அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1 ன் அப்பா மரியதாஸ் பேச முடியாத நிலையில் இருந்ததால் அ.சா.1 நடந்த விபரத்தை சொன்னதாக புகார் வாக்குமூலம் அளித்துள்ள விபரம் தெரியவருகிறது.

19. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 31/01/2018 ம் தேதி அம்மன்குடியில் உள்ள தனது வயலுக்கு சென்றுவிட்டு, தனது அப்பா அம்மன்குடியில் உள்ள அந்தோனியர் கோவில் அருகில் புதுக்குடியில் இருந்து அம்மன்குடி செல்லும் சாலையில், சாலையின் வலது புறமாக நடந்து சென்றுக் கொண்டிருந்தபோது, பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த சுந்தரமூர்த்தி என்பவர் தனது அப்பா பட்டியல் சாட்சி-2 மரியதாஸ் மீது மோதிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் புகார் வாக்குமூலத்தில் 30.01.2018 ம் தேதி காலை சுமார் 10.00

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:31 +0530

மணிக்கு அ.சா.1ன் அப்பா மரியதாஸ் வயல் வேலைக்கு போய்விட்டு ரோட்டின் இடது புற ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து செல்லும்போது அதே திசையில் பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதிவிட்டதாக புகார் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1ன் சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தில் மரியதாசுக்கு வலது கால் உடைந்தும், தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் புகார் வாக்குமூலத்தில் விபத்தில் அ.சா.1ன் அப்பாவிற்கு தலையின் பின் பக்கம், இடது காலில் முறிவும், வலது காலில் பலத்த ரத்தக்காயமும் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வழக்கு சம்பவம் புகார் வாக்குமூலத்தில் 30/01/2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு சம்பவம் அ.சா.1 சாட்சியத்தில் 31/01/2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து குறித்த சம்பவமானது அ.சா.1ன் சாட்சியத்திற்கும், புகார் வாக்குமூலத்திற்கும் முன்னுக்கு முரணாக அமைந்துள்ளதால் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது.

20. வழக்கு சம்பவம் குறித்து கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அன்புராஜ், வழக்கு சம்பவத்தின் போது சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு ஓடி சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்திருப்பது விபத்து சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 அழகர்ஜான் மற்றும் அ.சா.4 பாக்யராஜ் ஆகியோர்களும் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

21. வழக்கு சம்பவத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் விபத்து எவ்விதம் ஏற்பட்டது, சாலையில் எந்தப்பகுதியில் ஏற்பட்டது என்று குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. பார்வை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:37 +0530

மகஜர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை.

22. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 ரகுநாத் அவரது சாட்சியத்தில், இவ்வழக்கில் புகார் மனு பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது குறித்தும், சம்பயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், பின்பு சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை மோட்டார்வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சான்றிதழ்கள் பெற்றது குறித்தும் பட்டியல் சாட்சி-2 மரியதாசுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று பின் இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

23. எதிரி தான் அஜாக்கிரதையாக அல்லது கவனக்குறைவாக செயல்பட்டு விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க அரசுத்தரப்பில் போதிய சாட்சியங்கள் முன்நிறுத்தப்படவில்லை என்பதால், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

24. **முடிவாக, இவ்வழக்கில் எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:44 +0530

25. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 08/04/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:50 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ரீகன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. அன்புராஜ் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. அழகர் ராஜன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.4 | திரு.பாக்கியராஜ் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.5 | திரு. ரகுநாத் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 31/01/2018 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 31/01/2018 | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 31/01/2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 31/01/2018 | பார்வை மகசர் |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:25:56 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 31/01/2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 30/01/2018 | காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 05/03/2018 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**; இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**; இல்லை

**குறிப்பு:**

1. எதிரி 30/01/2018 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.08 12:26:03 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)